## விரைவு நீதிமன்றம் (ந.வ), உத்தமபாளையம்

**முன்னிலை: திரு.S.அமலநாத கமலக்கண்ணன்,** B.A.,B.L.,Hon's.,
நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம்,
உத்தமபாளையம்.

2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 31–ஆம் நாள் திங்கள்கிழமை

**சுருக்குமுறை ஆவண வழக்கு எண்.321/2025**

CNR.No.TNTH080008122025

| | |
|---|---|
| புகார்தாரர் | திரு.மூ.வைரமணி, (வயது 64/2026)<br>S/o மூக்கத்தேவர்,<br>வார்டு–1, நாயக்கர் தெரு,<br>க.புதுப்பட்டி,<br>உத்தமபாளையம் தாலுகா, தேனி மாவட்டம். |
| எதிரிகள் | 1) திரு.கு.சுந்தரமூர்த்தி, (வயது 46/2026)<br>த/பெ. குருநாதன்,<br>வார்டு – 19, மந்தையம்மன் கோவில்தெரு,<br>சின்னமனூர்,<br>உத்தமபாளையம் தாலுகா, தேனி மாவட்டம்.<br><br>2) திருமதி.சு.சத்யா (வயது 41/2026)<br>க/பெ.சுந்தரமூர்த்தி,<br>வார்டு – 19, மந்தையம்மன் கோவில்தெரு,<br>சின்னமனூர்,<br>உத்தமபாளையம் தாலுகா, தேனி மாவட்டம். |
| குற்றம் முறையிட்டது | மாற்று முறை ஆவணச் சட்டம் பிரிவுகள் 138, 142–ன் கீழ் |
| காசோலை எண். (000107) | 31.07.2025 |
| காசோலை தொகை | Rs.5,00,000/- |
| வசூலுக்கு தாக்கல் செய்த நாள் | 01.08.2025 |
| காசோலை திரும்பிய நாள் | 02.08.2025 |
| காசோலை திரும்பிய காரணம் | Refer to Drawer |
| அறிவிப்பு அனுப்பிய நாள் | 21.08.2025 |



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.08.31 18:32:43 +0530

| | |
|---|---|
| அறிவிப்பு திருப்பப்பட்ட நாள் | 30.08.2025 |
| வழக்கு தாக்கல் நாள் | 15.10.2025 |
| தீர்ப்பு நாள் | 31.08.2026 |
| புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர் | திரு.M.லட்சபிரபு |
| எதிரி தரப்பு வழக்கறிஞர் | திரு.T.லட்சுமிநாராயணன் |
| **தீர்வு** | எதிரிகள் ஆஜர். **1ம் எதிரி மீது பிரிவு 138 மாற்றுமுறை ஆவண சட்டத்தின் கீழ் குற்றவாளி இல்லை என்றும், 2ம் எதிரி மீது பிரிவு 138 மாற்றுமுறை ஆவண சட்டத்தின் கீழ் குற்றவாளி என முடிவு செய்து B.N.S.S பிரிவு 278(2)-ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது.** |

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

## தீர்ப்புரை

1. புகார்தாரர் வழக்கு சுருக்கம்:

எதிரிகள் இருவரும் கணவன், மனைவி ஆவார்கள். புகார்தாரரின் குடும்பத்திற்கும், எதிரிகள் குடும்பத்திற்கும் இடையே உள்ள குடும்ப பழக்கவழக்கத்தின் அடிப்படையில் எதிரிகள் புகார்தாரரிடம் அவசர நிமித்தமாகவும், சில்லறை கடன்களை தீர்க்கவும் வேண்டும் என்று கூறி ரூ.5,00,000/- எதிரி, புகார்தாரரிடம் கைமாற்று கடனாக பணம் கேட்டுள்ளார். புகார்தாரர் கடந்த 01.06.2025ம் தேதியன்று ரூ.5,00,000/-ஐ புகார்தாரர் தனது வீட்டில் வைத்து எதிரிகளுக்கு ரொக்கமாக கொடுத்துள்ளார். அதற்கு ஆதரவாக 31.07.2025 நாளிட்ட 000107 என்ற எண் கொண்ட கரூர் வைஸ்யா வங்கி, சின்னமனூர் கிளைக்குரிய ரூ.5,00,000/-த்திற்கான காசோலையை புகார்தாரரின் வீட்டில் வைத்து பூர்த்தி செய்து எதிரிகள் இருவரும் கையொப்பம் செய்து



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.08.31 18:32:50 +0530

கொடுத்துள்ளார்கள். அந்த காசோலையை பணமாக்கும் பொருட்டு புகார்தாரர் தான் கணக்கு வைத்துள்ள Bank of India, கம்பம் கிளையில் 01.08.2025 ம் தேதியன்று வசூலுக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி காசோலையானது "Refer to Drawer" என்ற காரணத்தினால் மதிப்பு மறுக்கப்பட்டு 02.08.2025 அன்று திரும்பியது. காசோலை தொகையை கேட்டு எதிரிகளுக்கு 21.08.2025 நாளிட்டு அனுப்பிய சட்ட அறிவிப்பை 30.08.2025 ம் தேதி எதிரிகள் பெற்றுகொள்ளாமல் திருப்பி அனுப்பி, பணம் செலுத்தாமல் இருந்துள்ளார்கள். மேலும் எதிரிகள் காசோலையின் தொகையை செலுத்தாமல் புகார்தாரரை மோசடி செய்து ஏமாற்றும் நோக்கத்துடன் செயல்பட்டதால் எதிரிகள் மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவுகள் 138 மற்றும் 142 ன் கீழ் குற்றம் இழைத்துள்ளார் என்பதால் எதிரிகளை தண்டிக்க வேண்டி இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

**2.** புகார்தாரர் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலம், புகார்மனு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்த்ததில் எதிரிகளுக்கு எதிராக வழக்கு விசாரணைக்கு உத்தரவிட முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால் எதிரிகளுக்கு பிரிவு 227 B.N.S.S–ன் கீழ் அழைப்பாணையுடன் இணைத்து புகார் நகல் அனுப்பப்பட்டது.

**3.** எதிரிகள் அழைப்பாணையையும், புகார் நகலையும் பெற்றுக்கொண்டு நீதிமன்றத்தில் ஆஜரானதும் எதிரிகளியிடம் B.N.S.S பிரிவு 274–ன் படி குற்றத்தின் சாரம்சம் குறித்து கேள்வி கேட்கப்பட்டது எதிரிகள் இருவரும் "பொய் வழக்கு" என்றும், புகார்தாரரை தெரியாது, முருகேசன் என்பவரிடம் கொடுத்தோம் என்றும், எதிரிகள் குற்றத்தை மறுத்து விசாரணை செய்ய வேண்டும் என்று கூறியுள்ளார்.



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.08.31 18:32:56 +0530

4. <u>புகார்தாரர் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்:</u>

புகார்தாரர் திரு.வைரமணி தனது புகாரில் கூறியுள்ள சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்து அது ம.சா.1 முதல் விசாரணை சாட்சியமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் கொடுத்த 31.07.2025–ம் தேதியிட்ட 000107 என்ற எண் கொண்ட கரூர் வைசியா வங்கி, சின்னமனூர் கிளைக்குரிய ரூ.5,00,000/–க்கான காசோலை அசல் ம.சா.ஆ.1 ஆகவும், மேற்படி காசோலை "Refer to Drawer" என்ற காரணத்தினால் மதிப்பு மறுக்கப்பட்டு 02.08.2025ம் தேதியன்று திரும்பியதற்கான வங்கி குறிப்புரை அசல் ம.சா.ஆ.2 ஆகவும், மேற்படி காசோலைக்குரிய தொகையை கேட்டு எதிரிகளுக்கு அனுப்பிய 21.08.2025 நாளிட்ட சட்ட அறிவிப்பு அலுவலக நகல் ம.சா.ஆ.3 ஆகவும், மேற்படி அறிவிப்பை எதிரிகள் 30.08.2025ம் தேதி பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்ட கவர்கள் (எண்ணிக்கை –2) ம.சா.ஆ.4 ஆகவும், ம.சா.1 குறியீடு செய்துள்ளார்.

5. <u>பிரிவு 351(1)(b) வினா மற்றும் பதில்:</u>

புகார்தாரர் தரப்பில் விசாரிக்க கூடுதல் சாட்சியம் இல்லை என மேற்குறிப்பு செய்ததால் புகார்தாரர் தரப்பு சாட்சியத்தில் எதிரிக்கு பாதகமாக உள்ள அம்சங்களை தொகுத்து BNSS பிரிவு 351(1)(ஆ)–ன் கீழ் வினவிய போது புகார்தாரர் தரப்பு சாட்சியத்தை பொய் சாட்சியம் என்றும், முருகேசன் என்பவரிடம் ரூ.50,000/– வாங்கினோம் என்றும், ம.சா.ஆ.1.ஆன காசோலை மற்றும் அதிலுள்ள கையொப்பங்களும் தங்களுடையதுதான் என்று எதிரிகள் இருவரும் பதில் அளித்தும், தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சி உள்ளது என்று கூறினார்கள்.

<u>6. எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>

6.1. எ.சா.1 தனது சாட்சியத்தில், கடந்த 2022ல் எனது மனைவி சத்யாவிற்கு விபத்து ஏற்பட்டதற்கு பணம் தேவைப்பட்டதால் கம்பத்தை சேர்ந்த



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.08.31 18:33:02 +0530

முருகேசன் என்பவரிடம் ரூ.2 லட்சம் பணம் வட்டிக்கு வாங்கினேன். அவர் என்னிடம் பொறுப்பிற்காக காசோலை கேட்டார். என்னிடம் காசோலை இல்லை என்று கூறினேன். எனது மனைவி பெண்கள் சுயஉதவி குழுவிற்காக எடுத்து வைத்திருந்த காசோலையில் சத்யாசுந்தரமூர்த்தி என்று எழுதியுள்ளதால், அதில் என்னை கையொப்பம் செய்யும்படி முருகேசன் கூறியதன் பேரில் கையொப்பம் செய்தேன். காசோலையில் எனது மனைவி கையொப்பம் செய்யவில்லை. முருகேசன் எனது வங்கி கணக்கிற்கு ரூ.2 லட்சம் அனுப்பினார். மேற்படி பணத்தை ஒரு மாதத்தில் G pay மூலம் முருகேசனுக்கு திருப்பி அனுப்பினேன்.

6.2. நான் 2024 வரை புகார்தாரருடன் வரவு செலவு வைத்திருந்தேன். கடைசியாக ரூ.50 ஆயிரம் பாக்கி இருப்பதாக முருகேசன் கூறினார். அந்த தொகையும் நான் அவரது வங்கி கணக்கில் செலுத்திவிட்டேன். காசோலையை திருப்பி கேட்கும்போது வார வட்டிதான் போட்டேன். மாத வட்டி போடவில்லை. சின்னமனூரில் ஒருநாள் பொன்னுச்சாமி தியேட்டர் அருகே முருகேசனை பார்த்து காசோலை கேட்டபோது தரமுடியாது என்று கூறியதால் எங்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டு என்னை பார்த்து கொள்வதாக கூறி விட்டு சென்றுவிட்டார்.

6.3. நான் சின்னமனூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார்மனு எ.சா.ஆ.1 ஆகவும், தேனி, S.P.அலுவலகத்தில் கொடுத்த புகார்மனு எ.சா.ஆ.2 ஆகவும், மேற்படி புகார்மனு அனுப்பியதற்கான ஒப்புதல் அட்டை எ.சா.ஆ.3 ஆகவும், நான் முருகேசனுக்கு பணம் செலுத்தியதற்கும், முருகேசன் எனக்கு பணம் செலுத்தியதற்கான இந்தியன் வங்கியின் கணக்கு பட்டியல் எ.சா.ஆ.4 ஆகவும், எதிரியின் SBI வங்கியின் கணக்கு பட்டியல் எ.சா.ஆ.5 ஆகவும் தாக்கல் செய்துள்ளார். முருகேசன் எனக்கு மொத்தம் ரூ.6,78,000/- GPay மூலம் செலுத்தியுள்ளார். ரூ.9,81,000/- வட்டி மற்றும் அசல் சேர்த்து நான் முருகேசனுக்கு பணம் செலுத்தியிருந்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.08.31 18:33:11 +0530

6.4. எ.சா.2 KVB வங்கி, சின்னமனூர் கிளை மேலாளர் திரு.கிருஷ்ணமூர்த்தி தனது சாட்சியத்தில், சத்யா என்பவர் எங்கள் வங்கியில் சேமிப்பு கணக்கு வைத்துள்ளார் என்றும், அவரது கணக்கானது சுந்தரமூர்த்தி என்ற பெயரில் கூட்டு கணக்காக இல்லை என்றும், மேற்படி கணக்கானது அதிக வருடமாக செயலில் இல்லாததால் Dormant status–ல் உள்ளது. பொதுவாக காசோலையில் கணக்கில் இல்லாத நபர் கையொப்பம் செய்திருக்கும் பட்சத்தில் கையொப்பம் மாறுதலாக உள்ளது என்ற காரணம் குறிப்பிட்டு திருப்பப்படும் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

7. <u>புகார்தாரர் தரப்பு வாதம்:</u>

கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், புகார்தாரர் அவரது சாட்சியத்தின் மூலமும், ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் மூலமும், எதிரிகள் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது. ம.சா.ஆ.1 ஆன காசோலையும், அதிலுள்ள கையொப்பமும் தன்னுடையதுதான் என்று எதிரிகள் ஒப்புக்கொண்டுள்ளதால் மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின் அனுமானங்கள் புகார்தாருக்கு ஆதரவாக உள்ளது. புகார்தாரரிடம், எதிரிகள் கடன் பெற்றுக்கொண்டு மோசடி செய்யவேண்டும் என்ற நோக்கத்துடன், 1வது எதிரிக்கு வங்கியில் கணக்கு இல்லை என்று தெரிந்துகொண்டு காசோலையில் கையொப்பம் செய்து கொடுத்துள்ளார்கள். எதிரிகளின் எதிர்வாதத்தை அவரது தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கவில்லை. புகார்தாரர் அனுப்பிய அறிவிப்புகளை எதிரிகள் பெற்றுக்கொள்ளாமலும், பதிலறிவிப்பு அனுப்பாமலும் எதிரிகள் இருந்துள்ளார்கள். முருகேசன் என்பவரை விசாரிக்க எதிரிகள் தரப்பில் எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை. புகார்தாரருக்கு ஆதரவாக இருக்கும் அனுமானங்கள் எதிரிகள் தரப்பில் மறுக்கப்படவில்லை. எனவே எதிரிகள் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என்ற வாதத்தினை முன்வைத்தார்.



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.08.31 18:33:18 +0530

8. <u>எதிரிகள் தரப்பு வாதம்:</u>

எதிரி தரப்பில் எழுத்துப்பூர்வமான வாதுரை தாக்கல் செய்யப்பட்டது. கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், எதிரிகள் புகார்தாரரிடம் ரூ.5 லட்சம் கைமாற்று கடனாக வாங்கவில்லை. முருகேசன் என்பவரிடம் 1வது எதிரி வாங்கிய ரூ.2,00,000/-க்கு ஆதரவாக கொடுத்த 2ம் எதிரியின் தாவா காசோலையை வைத்து புகார்தாரர் பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார். புகார்தாரர், முருகேசன் மீது காவல் நிலையத்தில் 1ம் எதிரி புகார் கொடுத்ததற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1ம் எதிரிக்கும், முருகேசன் என்பவருக்கும் இடையே வரவு செலவு இருந்தது என்பதை வங்கி பரிவர்த்தனைகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. காசோலையில் 2வது எதிரியின் கையொப்பம் இல்லை. தாவா காசோலையானது கூட்டு கணக்கிற்காக வழங்கிய காசோலை இல்லை. 1ம் எதிரிக்கு வங்கியில் கணக்கு இல்லை. எதிரி காசோலை தொகையை செலுத்த கடமைப்பட்டவர் இல்லை. ஆகையால் புகார்தாரருக்கு ஆதரவாக இருப்பதாக கூறப்படும் அனுமானங்கள் மறுக்கப்பட்டுள்ளது என்பதால் எதிரிக்கு எதிராக பிரிவு 138 மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் கீழ் தண்டிக்க இயலாது என்ற வாதத்தை முன்வைத்தார்.

9. சான்றாவணங்கள் மற்றும் இதர வழக்கு ஆவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டு கருத்தில் எடுத்து கொள்ளப்பட்டது.

10. <u>இவ்வழக்கில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றமான மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவு 138-ன் படி சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா ? என்பது தீர்விற்குரிய பிரச்சனையாகும்.</u>

10.1. எதிரி மீதான குற்றத்தை நிரூபிக்க பிரிவு 138 மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின் உட்கூறுகள் நிரூபிக்கப்பட்டிருக்க வேண்டும்.



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.08.31 18:33:26 +0530

➢ முதலில் எதிரிகள், புகார்தாரருக்கு 31.07.2025–ம் தேதியிட்டு ரூ.5,00,000/–க்கு கொடுத்த கரூர் வைஸ்யா வங்கி, சின்னமனூர் கிளைக்குரிய ம.சா.ஆ.1 காசோலையானது உரிய காலத்திற்குள் வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

➢ மேற்படி காசோலையானது கடந்த 02.08.2025ம் தேதியன்று Refer to Drawer என்ற காரணத்தினால் மதிப்பு மறுக்கப்பட்டு பேங்க் ஆப் இந்தியா வங்கி, கம்பம் கிளையிலிருந்து திருப்பப்பட்டது என்பது ம.சா.ஆ.2 ஆவணத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

➢ காசோலை திரும்பியது குறித்து 21.08.2025–ம் தேதியன்று புகார்தாரர் உரிய காலத்திற்குள் எதிரிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளது ம.சா.ஆ.3 ஆவணத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

➢ மேற்படி அறிவிப்பை 30.08.2025–ம் தேதியன்று எதிரிகள் பெற்று கொள்ளாமல் திருப்பப்பட்ட கவர்கள் அசல் ம.சா.ஆ.4 ஆவணத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

அதன்பின்னர் எதிரி 15 நாட்களுக்குள் பணம் செலுத்தாமல் இருந்ததால் உரிய காலத்திற்குள் புகார்தாரர் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

10.2. <u>தற்போது தாவா காசோலையானது எதிரிகளின் காசோலைதானா? என்றும், எதிரிகள் தன்னுடைய சட்டப்படியான கடனை தீர்க்க தான் புகார்தாரருக்கு தாவா காசோலையை கொடுத்தார்களா?</u> என்பதை பரிசீலனை செய்கையில், தாவா காசோலையானது தனது காசோலை இல்லை என்று 1ம் எதிரி சுந்தரமூர்த்தி கூறியுள்ளார். மேற்படி விபரங்களை ஊர்ஜிதம் செய்யும் வகையில், காசோலை வழங்கிய வங்கியின் மேலாளரான கிருஷ்ணமூர்த்தி என்பவரை எ.சா.2 ஆக எதிரி தரப்பில் விசாரணை செய்யப்பட்டது. எ.சா.2 அவரது சாட்சியத்தில், தாவா காசோலையானது எங்கள் வங்கியிலிருந்து 2ம்



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.08.31 18:33:34 +0530

எதிரியான சத்யா என்பவருக்கு வழங்கப்பட்டது என்றும், அந்த கணக்கானது சுந்தரமூர்த்தி என்ற பெயரில் கூட்டுக்கணக்காக இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். ஆகையால், தாவா காசோலையானது 2ம் எதிரியின் காசோலை என்றும், கூட்டுக்கணக்கிற்கான காசோலை இல்லை என்று தெரியவருகிறது.

10.3. மேற்படி காசோலையை குறித்து 2வது எதிரியிடம் முதல்கேள்வி மற்றும் பிரிவு 351(1)(b) BNSS–ன் கீழ் நீதிமன்றம் கேள்விகள் கேட்டபோது, காசோலையில் உள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்று 2ம் எதிரி ஒப்புக்கொண்டுள்ளார். 1வது எதிரி தானாக முன்வந்து தன்னை எ.சா.1 ஆக விசாரணை செய்துள்ளார். எ.சா.1 தனது சாட்சியத்தில், காசோலையில் உள்ள கையொப்பமானது 2ம் எதிரியின் கையொப்பம் இல்லை என்று கூறியுள்ளார். ஆனால் காசோலையில் உள்ள கையொப்பமானது தன்னுடையது இல்லை என்று 2ம் எதிரி சாட்சியம் அளிக்க முன்வரவில்லை. மேலும் 2ம் எதிரியிடம் வழக்கு சம்பந்தமாக கேள்விகள் கேட்டபோது காசோலையில் உள்ள கையொப்பம் தன்னுடையது என்று ஒப்புக்கொண்டதால், மாற்றுமுறை ஆவணச் சட்டப்பிரிவு 118 (a)–ன்படி வழக்கு காசோலை மறுபயனுக்காகத்தான் கொடுக்கப்பட்டுள்ளது என்று புகார்தாரருக்கு ஆதரவாக அனுமானம் நிலவுகிறது. மேலும், K.Bhaskaran Vs. Sankaran Vaidhyan Balan (1999 (4) RCR (Criminal) 309) என்ற மாண்புமிகு உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி, எதிரியின் காசோலையில் உள்ள கையொப்பத்தை மறுக்கப்படவில்லை என்பதால் மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவு 139–ன் படி காசோலையானது சட்டப்படியான கடனை தீர்ப்பதற்காக கொடுக்கப்பட்டதுதான் என்று புகார்தாரருக்கு ஆதரவாக அனுமானம் நிலவுகிறது.

10.4. மேற்கண்ட அனுமானங்கள் புகார்தாரருக்கு ஆதரவாக இருக்கும் பட்சத்தில் எதிரிகள் தரப்பில் மறுக்ககூடிய அனுமானங்கள் ஆகும். Basalingappa Vs mudibasappa என்ற மாண்புமிகு உயர்நீதிமன்ற தீர்ப்பின்படி எதிரி தனது தரப்பு சாட்சியங்களை முன் நிறுத்துவதன் மூலமாகவோ அல்லது புகார்தாரர் சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தோ Pre–Ponderance of probability என்ற



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.08.31 18:33:54 +0530

அடிப்படையில் தனது தரப்பிற்கு ஆதரவாக எதிர்வாதத்திற்குரிய சந்தேகத்தை ஏற்படுத்துவதன் மூலம் மறுக்கலாம்.

10.5. மேற்படி அனுமானங்கள் புகார்தாரருக்கு ஆதரவாக இருக்கும் நிலையில், எதிரிகள் தரப்பில் இருந்து மறுக்கப்படும் சங்கதிகள் யாதெனில்,

"எதிரிகள் புகார்தாரரிடம் ரூ.5,00,000/- கைமாற்று கடன் வாங்கவில்லை என்றும், முருகேசன் என்பவரிடம் 1வது எதிரி வாங்கிய ரூ.2,00,000/-க்கு ஆதரவாக கொடுத்த 2ம் எதிரியின் தாவா காசோலையை வைத்து புகார்தாரர் பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார்" என்று புகார்தாரரின் வழக்கினை மறுக்கப்பட்டுள்ளது.

10.6. புகார்தாரரின் வழக்கை நிரூபிக்கும் வகையில், ம.சா.ஆ.1 ஆன 2ம் எதிரியின் காசோலையை புகார்தாரர் தாக்கல் செய்துள்ளார். தாவா காசோலை வங்கியிலிருந்து மறுக்கப்பட்ட பின்னர் புகார்தாரர் எதிரிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார். அதனை எதிரிகள் பெற்றுக்கொள்ளாமல் மறுத்துள்ளார்கள். மேற்படி அறிவிப்புகளை எதிரிகள் எதற்காக பெறவில்லை என்பதை குறித்து அவர்கள் எவ்வித விளக்கமும் அளிக்கவில்லை. மேலும் புகார்தாரருக்கு எதிரிகள் பதிலறிவிப்பு அனுப்பவில்லை.

10.7. எ.சா.1 அவரது சாட்சியத்தில், கடந்த 2022-ல் 2ம் எதிரிக்கு விபத்து ஏற்பட்டதால் முருகேசன் என்பவரிடம் ரூ2,00,000/- கடன் வட்டிக்கு வாங்கினேன் என்றும், அதற்கு எனது மனைவியின் காசோலையில் சத்யா சுந்தரமூர்த்தி என்று எழுதியுள்ளதால், 1ம் எதிரியின் கையொப்பம் செய்யக்கூறியதன் பேரில் 1ம் எதிரி கையொப்பம் செய்துள்ளார் என்றும், மேற்படி ரூ2,00,000/- ஒரு மாதத்தில் திருப்பி செலுத்திவிட்டதாகவும், 2024 வரை அவருடன் வரவு செலவு வைத்திருந்ததாகவும், காசோலையை திரும்ப கேட்டபோது வாரவட்டி போட்டிருப்பதாக கூறியதால் அவர்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டது என்றும், சின்னமனூர் பொன்னுசாமி தியேட்டர் அருகே



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.08.31 18:34:00 +0530

முருகேசனை பார்த்து காசோலையை கேட்டபோது தரமுடியாது என்று கூறியதால் வாக்குவாதம் ஏற்பட்டதாக சாட்சியம் அளித்துள்ளார்.

10.8. மேற்படி முருகேசன் என்பவர் தனக்கு தெரியாது என புகார்தாரர் சாட்சியம் அளித்திருக்கும் நிலையில், முருகேசனும், புகார்தாரரும் ஒருவருக்கொருவர் தெரிந்த நபர்கள் என்பதை நிரூபிக்கும் வகையில் எதிரிகள் தரப்பில் எவ்வித சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் முன்நிறுத்தவில்லை. முருகேசனிடம்தான் 1ம் எதிரி வரவு செலவு வைத்திருந்தார் என்றும், காசோலை கொடுத்தார் என்பதை நிரூபிக்கும் வகையில் முருகேசனை சாட்சியாக விசாரிக்க எதிரிகள் தரப்பில் எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை.

10.9. மேற்படி முருகேசனுக்கும், 1ம் எதிரிக்கும் வரவு செலவு இருந்ததாக எதிரிகள் தரப்பில் கூறினாலும், 1ம் எதிரி முருகேசனிடம் எதிரி எந்த தேதியில், எங்கு வைத்து, யார் முன்னிலையில் பணம் பெற்றார் என்றும், எந்த தேதியில் மேற்படி தொகையை திருப்பி செலுத்தினார் என்றும், எந்த தேதியில் காசோலையை கொடுத்தார் என்று எதிரி தரப்பில் எந்தவித விளக்கமும் அளிக்கவில்லை.

10.10. மேலும் முருகேசனிடம் வாங்கிய கடனானது தீர்வுசெய்யப்பட்டதாக எதிரிகள் தரப்பில் கூறும் நிலையில், முருகேசனிடமிருந்து காசோலையை திரும்ப பெறுவதற்கு எதிரிகள் சட்டரீதியான நடவடிக்கைகள் எடுத்திருக்க வேண்டும் மற்றும் 2ம் எதிரி கணக்கு வைத்திருக்கும் வங்கியில் காசோலையை பொறுத்து Stop Payment செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். ஆனால் மேற்படி நடவடிக்கைகளை எதிரிகள் எடுக்கவில்லை.

10.11. மேலும் வழக்கு தாக்கல் செய்தபின்பு 10.03.2026ம் தேதியன்று 1ம் எதிரி சின்னமனூர் காவல் நிலையத்தில் முருகேசன், ஜெயலட்சுமி, புகார்தாரர் வைரமணி மீது எ.சா.ஆ.1 ஆன புகார்மனுவை கொடுத்துள்ளார். பின்பு 25.05.2026-ல் 1ம் எதிரி தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் முருகேசன், ஜெயலட்சுமி, புகார்தாரர் வைரமணி மீது எ.சா.ஆ.2 ஆன



AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.08.31 18:34:06 +0530

புகார்மனுவை கொடுத்துள்ளார். மேற்படி புகார்மனு சார்வு செய்யப்பட்டதற்கான ஒப்புதல் அட்டையை எ.சா.ஆ.3 ஆக 1ம் எதிரி தாக்கல் செய்துள்ளார். மேற்படி ஆவணங்களை பரிசீலனை செய்கையில், இவ்வழக்கு தாக்கல் செய்த பின்பு 1ம் எதிரி புகார்தாரர் மீதும், முருகேசன் மீதும் காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்பது தெரிய வருகிறது.

10.12. இருப்பினும், காசோலை வசூலுக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே 1ம் எதிரிக்கும், முருகேசன் என்பவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டதாக, 1ம் எதிரி சாட்சியம் அளித்திருக்கும் நிலையில், காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே 1ம் எதிரி காவல்நிலையத்தின் மூலம் சட்ட நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறான நடவடிக்கையை 1ம் எதிரி எடுக்காமல் இவ்வழக்கு தாக்கல் செய்தபிறகு எடுத்துள்ள காரணத்தினால் மட்டுமே புகார்தாரருக்கு எதிரான அனுமானங்கள் மறுக்கப்பட்டதாக தீர்மானிக்க இயலாது என்று முடிவு செய்கிறது.

10.13. மேலும் 1ம்எதிரி முருகேசனிடம் பணம் வாங்கி திருப்பி செலுத்தினார் என்பதற்கு எ.சா.ஆ 4 மற்றும் எ.சா.ஆ.5 ஆன 1ம் எதிரியின் வங்கி பரிவர்த்தனைகளை தாக்கல் செய்துள்ளார். மேற்படி ஆவணங்களை பரிசீலனை செய்கையில் 1ம் எதிரிக்கும், முருகேசனுக்கும் வரவு செலவு இருந்துள்ளதாக தெரியவந்தாலும், காசோலை முருகேசனிடம்தான் 1ம் எதிரி கொடுத்தார் என்பதை நிரூபிக்கும் வகையில் எதிரிகள் தரப்பில் வேறு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் தாக்கல் செய்யவில்லை. ஆகையால் தாவா காசோலையை 1ம் எதிரி, முருகேசனிடம்தான் கொடுத்தார் என்பதை அவரது தரப்பில் நிரூபிக்கவில்லை என்று முடிவு செய்கிறது.

10.14. புகார்தாரர் அவரது மனுவில், 01.06.2025ம் தேதியன்று எதிரிகள் இருவரும், புகார்தாரரின் வீட்டிற்கு சென்று பணம் பெற்றதாக கூறியுள்ளார். ஆனால் புகார்தாரர் பணம் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியன்று எதிரிகள் புகார்தாரரின் வீட்டிற்கு செல்லவில்லை என்றும், காசோலையை



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.08.31 18:34:13 +0530

கொடுக்கவில்லை என்றும், வேறு இடத்தில் இருந்தார்கள் என்பதை நிரூபிக்கும் வகையில் எதிரிகள் எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை.

10.15. இவ்வழக்கில் காசோலை மற்றும் அதிலுள்ள கையொப்பம் 1ம் எதிரியுடையது இல்லை என்பதால் அவர் குற்றவாளி ஆகமாட்டார். மேலும் காசோலை மற்றும் அதிலுள்ள கையொப்பம் 2ம் எதிரியுடையதுதான் என்ற காரணத்தினாலும், காசோலையை புகார்தாரரிடம் கொடுக்கவில்லை என்று எதிரி தரப்பில் நிரூபிக்காத காரணத்தினாலும், முருகேசன் என்பவரை சாட்சியாக விசாரிக்க எதிரி தரப்பில் எவ்வித முயற்சிகளும் எடுக்காத காரணத்தினாலும், 2ம் எதிரியும், அவரது கணவரும் பணம் வாங்கியதாக சொல்லப்படும் தேதியன்று புகார்தாரரை சந்திக்கவில்லை என்பதை நிரூபிக்காத காரணத்தினாலும், எதிரி தரப்பின் எதிர்வாதத்தை நிரூபிக்கும் வகையில் வேறு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை அவரது தரப்பில் தாக்கல் செய்யாத காரணத்தினாலும், புகார்தாரருக்கு ஆதரவாக இருக்கும் மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவு 118(a) மற்றும் பிரிவு 139 கீழான சட்டப்படி அனுமானங்களை எதிரி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் மறுக்கப்படவில்லை என்று முடிவு செய்கிறது. எனவே 2ம் எதிரியும், அவரது கணவரும், புகார்தாரரிடம் வாங்கிய சட்டப்படியான கடனுக்கு ஆதரவாக தாவா காசோலையை புகார்தாரரிடம் கொடுத்துள்ளார்கள் என்றும், காசோலை தொகையை 2ம் எதிரி புகார்தாரருக்கு கொடுக்க கடமைப்பட்டவர் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

10.16. மேலே விவரிக்கப்பட்டுள்ள காரணங்களின் அடிப்படையில் 2ம் எதிரி மீது மாற்றுமுறை ஆவணசட்டம் பிரிவு 138–ன் படியான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.08.31 18:34:20 +0530

**11. முடிவு:**

எதிரிகள் ஆஜர். முடிவாக, 1ம் எதிரி மீது பிரிவு 138 மாற்றுமுறை ஆவண சட்டத்தின் கீழ் குற்றவாளி இல்லை என்றும், 2ம் எதிரி மீது பிரிவு 138 மாற்றுமுறை ஆவண சட்டத்தின் கீழ் குற்றவாளி என தீர்மானித்து இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**12.தண்டனை:**

முடிவாக, 2ம் எதிரி மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138ன் கீழ் குற்றவாளி என்று முடிவு செய்து, 2ம் எதிரிக்கு மாற்று முறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138–ன் கீழான குற்றத்திற்கு 3 மாதங்கள் மெய்க்காவல் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று பிரிவு 278(2)–ன் B.N.S.S கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது.

**13. குவிமுச பிரிவு 357–ன் கீழ் இழப்பீடு:**

தாவா காசோலை தொகையை 2ம் எதிரி புகார்தாரருக்கு 2 மாத காலத்திற்குள் பிரிவு 395(3) B.N.S.S–ன் கீழ் இழப்பீடாக செலுத்த வேண்டும், தொகை செலுத்த தவறினால் மேலும் கூடுதலாக 2ம் எதிரி 1 மாதம் காலம் மெய்காவல் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று இந்நீதிமன்றம் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு 2026ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 31–ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.08.31 18:34:26 +0530

**நீதித்துறை நடுவர்,**
**விரைவு நீதிமன்றம், உத்தமபாளையம்.**

**1. புகார்தாரர் தரப்பு சாட்சி:**

| | | |
|---|---|---|
| 1 | ம.சா.1 | திரு. வைரமணி (புகார்தாரர்) |

2. <u>புகார்தாரர் தரப்பு சான்றவணங்கள்:</u>

| | | |
|---|---|---|
| 1 | ம.சா.ஆ.1 | 31.07.2025 நாளிட்ட 000107 என்ற எண் கொண்ட Karur Vysya Bank, சின்னமனூர் கிளைக்குரிய ரூ.5,00,000/-க்கான காசோலை அசல். |
| 2 | ம.சா.ஆ.2 | 02.08.2025 நாளிட்டு Refer to Drawer என்ற காரணத்தினால் திருப்பப்பட்ட Bank of India, கம்பம் வங்கி குறிப்புரை அசல். |
| 3 | ம.சா.ஆ.3 | 21.08.2025 நாளிட்ட புகார்தாரர் எதிரிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அஞ்சல் ரசீதுகள் (எண்ணம்-2). |
| 4 | ம.சா.ஆ.4 | 30.08.2025 நாளிட்டு அறிவிப்பினை எதிரி பெற்றுகெள்ளாமால் திருப்பப்பட்ட கவர்கள் அசல் (எண்ணம் -2). |

3. <u>புகார்தாரர் தரப்பு சான்றுபொருள்</u>: இல்லை

4. <u>எதிரிகள் தரப்பு சாட்சிகள்:</u>

| | | |
|---|---|---|
| 1 | எ.சா.1 | திரு. சுந்தரமூர்த்தி |
| 2 | எ.சா.2 | திரு. கிருஷ்ணமூர்த்தி (KVB வங்கி, சின்னமனூர் கிளை மேலாளர்) |

<u>5. எதிரிகள் தரப்பு சான்றாவணங்கள்:</u>

| | | |
|---|---|---|
| 1 | எ.சா.ஆ.1 | எதிரி புகார்தாரர் மீது சின்னமனூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார்மனு. |
| 2 | எ.சா.ஆ.2 | எதிரி புகார்தாரர் மீது தேனி, S.P. அலுவலகத்தில் கொடுத்த புகார்மனு. |
| 3 | எ.சா.ஆ.3 | எதிரி புகார்தாரர் மீது தேனி, S.P. அலுவலகத்தில் கொடுத்த புகார் மனு அனுப்பியதற்கான ஒப்புதல் அட்டை. |
| 4 | எ.சா.ஆ.4 | எதிரி முருகேசனுக்கு பணம் செலுத்தியதற்கும், முருகேசன், எதிரிக்கு பணம் செலுத்தியதற்கான எதிரியின் இந்தியன் வங்கி கணக்கு பட்டியல். |
| 5 | எ.சா.ஆ.5 | எதிரியின் SBI வங்கி கணக்கு பட்டியல். |

6. <u>எதிரிகள் தரப்பு சான்றுபொருள்:</u> இல்லை

AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.08.31 18:34:34 +0530

**நீதித்துறை நடுவர்,**
**விரைவு நீதிமன்றம், உத்தமபாளையம்.**